சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

பொது அறிவிப்பு.

நுகர்வோருக்கான வேண்டுகோள்.

-----

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், புதிய நுகர்வோர் அட்டை வழங்குவதற்காக, சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பின்வரும் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ஏற்கனவே இருந்த குடிநீர் மற்றும் கழிவு நீர் இணைப்புகளின் தகவல்களைச் சேகரிக்க உள்ளது.

1. திருவொற்றியூர் (குடிநீர் வாரிய பகுதி 1), 2. மணலி (குடிநீர் வாரிய பகுதி 2), 3. மாதவரம் (குடிநீர் வாரிய பகுதி 3), 4. அம்பத்தூர் (குடிநீர் வாரிய பகுதி 7), 5. வளசரவாக்கம் (குடிநீர் வாரிய பகுதி 11), 6. ஆலந்தூர் (குடிநீர் வாரிய பகுதி 12), 7. பெருங்குடி (குடிநீர் வாரிய பகுதி 14) மற்றும் 8. சோழிங்கநல்லூர் (குடிநீர் வாரிய பகுதி 15).

மேலே குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள நுகர்வோர், தங்களது குடிநீர் மற்றும் கழிவு நீர் இணைப்புகள் குறித்த தகவல்களை கீழ்க்கண்ட படிவத்தில், பகுதி அலுவலகம்/பணிமனை அலுவலகங்களிலோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ, குடிநீர் வாரியத்திற்குத் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தகவல்கள் வாரிய பதிவேடுகளில் பதிவு செய்யப் படுவதால் நுகர்வோர் பயனடைவதுடன், தேவையற்ற கடிதபோக்குவரத்தையும்/ விவாதங்களையும் தவிர்க்க உதவும்.

| | |
|---|---|
| நுகர்வோரின் பெயர் | – |
| விலாசம் | – |
| கதவு எண் | – |
| தெருவின் பெயர் | – |
| இருப்பிடம் (நகர்) | – |
| அஞ்சல் குறியீடு | – |
| பழைய பிரிவு எண் | – |
| புதிய கோட்டம் (Zone) எண் | – |
| நகராட்சி சொத்து வரி எண் | – |
| கழிவு நீர் இணைப்பு எண் மற்றும் இணைப்புப் பெற்ற நாள் | – |
| குடிநீர் இணைப்பு எண் மற்றும் இணைப்புப் பெற்ற நாள் | – |
| சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்ட புதிய எண் | – |
| வகைப்பாடு:– குடியிருப்பு/வணிகம்/இதர | – |
| தொலைபேசி எண் | – |
| மின்னஞ்சல் முகவரி | – |

மேலும் விவரங்களுக்கு தங்கள் பகுதியில் உள்ள பகுதிப்பொறியாளர்/முதுநிலை கணக்கு அலுவலரை தொடர்பு கொள்ளலாம்

தவறான தகவல் அளித்தாலோ/தகவல் அளிக்காமல் இருந்தாலோ சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று சட்டம் 1978–ன் படி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

நிர்வாக இயக்குனர்.

https://cmwssb.tn.gov.in என்கிற இணைய தளத்தில் படிவத்தினை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து cofrevenue@gmail.com, cofrevenue@chennaimetrowater.com என்கிற மின்னஞ்சல் முகவரியில் அனுப்பலாம்.